

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இரண்டாம் கட்ட மனுநீதி முகாமில் 86 யனாளிகளுக்கு தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை கல்குளம் வட்டம், வெள்ளிச்சந்தை வருவாய் கிராமத்திற்குட்பட்ட சரல், புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளியில் இன்று (11.01.2017) வழங்கினார். நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 26/2017 நாள்: 11.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் 86 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வெள்ளிச்சந்தை வருவாய் கிராமத்திற்குட்பட்ட சரல், புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாம் நிறைவுநாள் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.01.2017) நடைபெற்றது.

முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

இது போன்ற மனுநீதிநாள் முகாம் மாதம் ஒருமுறை ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அனைத்துதுறை அரசு அலுவலர்களையும் ஒரே இடத்தில் வரவழைத்து, பொதுமக்களாகிய நீங்கள் அளிக்கின்ற மனுக்களுக்கு தீர்வு காணும்விதமாகதான் இம்மாதிரியான மனுநீதி நாள் முகாம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அளிக்கப்பட்ட மனுக்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று தனிநபர் மனு, இரண்டு பொதுநல மனு.

தனிநபர் மனுவை பொறுத்த மட்டில், திருமண நிதியுதவி, முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், குடும்ப அட்டை, தொழில் முனைவோர் கடனுதவி இதுபோன்ற பலவகையான மனுக்களை தனி நபர் மனுக்களாக கருதலாம்.

பொதுநல மனுவை பொறுத்தமட்டில், ஒரு கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, கல்வி வசதி இதுபோன்ற பலவகையான மனுக்களாக பொது நல மனுவாக கருதலாம்.

இந்த இரண்டு மனுக்களையும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமேயானால், விரைந்து தீர்வு காணப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, வேளாண்மைத் துறையின் மூலம் விதை மானியம் 2 நபர்களுக்கும், தோட்டக்கலைத்துறையின் மூலம் மிளகு பரப்பு உரமானியம் 2 நபர்களுக்கும், முதியோர் உதவி தொகை 25 நபர்களுக்கும், இந்திராகாந்தி தேசிய திட்டத்தின்கீழ் முதியோர் உதவித்தொகை 19 நபர்களுக்கும், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதிய திட்டத்தின்கீழ், 16 நபர்களுக்கும், ஆதரவற்ற மாற்றுத்திறனாளி ஓய்வூதிய திட்டத்தின்கீழ், 7 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட 3 நபர்களுக்கு ஓய்வூதியமும், புதிய குடும்ப அட்டை 12 நபர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் வழங்கினார்கள்.

இம்முகாமில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், சமூக பாதுகாப்புத்திட்ட தனி துணை ஆட்சியர் திரு.சந்திரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. சிவதாஸ், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், கல்குளம் வட்டாட்சியர் திருமதி. புவனேஸ்வரி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

----------------------------------------------------------------------------------------------------------------------------

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.